# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
முதலாம் தவணைப் பரீட்சை - 2021

# Conducted by Field Work Centre, Thondaimanaru.
# 1st Term Examination - 2021

FWC

| நாடகமும் அரங்கியலும் Drama & Theater | Three Hours / Gr -12 (2022) | 58 | T | I,II |
|---|---|---|---|---|

## பகுதி I

❖ **இப்பகுதியில் 1 – 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும், பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தினை அடைப்புக் குறியினுள் எழுதுக.**

01. ‘அழகை கண்டு பிடிப்பதும் அதனை வெளிப்படுத்துவதுமே கலை’ எனக் கூறியவர்?
1) அரவிந்தர் 2) தாகூர் 3) பரதர் 4) மாசேதுங் 5) எரிக் நியூட்டன் ( )

02. “சுவைபட வந்தன வெல்லாம் ஓரிடத்தே வந்தனவாக தொகுத்து கூறுதல் - நாடக வழக்கு” என கூறியவர்.
1) இளம் பூரணார 2) பரதர் 3) அபிநவகுப்தர்
4) சுவாமி விபுலானந்தர் 5) பரிதிமாற் கலைஞர் ( )

03. நாடகம் என்பது உலக இயல்பை போலச் செய்தல் ஆகும் எனும் கருத்தைக் கூறியவர்.
1) பரத முனிவர் 2) ரூசோ 3) அரிஸ்ரோட்டல்
4) பேர்ணாட்ஷா 5) அலடைஸ்நிக்கொல் ( )

04. ‘வில்லுப்பாட்டு’ கலையின் பிரதான அம்சம்.
1) நகைச்சுவை 2) நடிப்பு 3) அபிநயம்
4) கதைசொல்லல் 5) பாடல் ( )

05. நாடகம் ஒரு
1) ஆடற்கலை 2) பாடற்கலை 3) ஆக்கும் கலை
4) தனிக்கலை 5) கூட்டுக்கலை ( )

06. பார்ப்போரின் பதிற்குறி தாக்கம் செலுத்தும் கலைகளில் ஒன்று.
1) ஓவியம் 2) கட்டிடம் 3) நாடகம் 4) சிற்பம் 5) இலக்கியம் ( )

07. ‘பலே நடனம்’ தோன்றிய நாடுகளிலொன்று.
1) ஜேர்மனி 2) கிரேக்கம் 3) இத்தாலி 4) சீனா 5) நோர்வே ( )

08. ‘பார்ஸிய வழி’ இசை நாடகம் சிங்கள மக்கள் மத்தியில் பின்வருமாறு அழைக்கப்படுகின்றது.
1) நாடகம் 2) ஒப்பேரா 3) கோலம் 4) சொக்கரி 5) நூர்தி ( )

09. ‘ஊமம்’ தோற்றம் பெற்ற நாடு.
1) கிரேக்கம் 2) இங்கிலாந்து 3) இந்தியா
4) உரோம் 5) இத்தாலி ( )

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk

10. அருகில் உள்ள படத்தில் காணப்படுவது.
   1) பலே
   2) பீஜிங்ஒபேறா
   3) இசை நாடகம்
   4) கபுக்கி
   5) புன்ரக்கு




( )

11. தியேட்டர் என்பது அடிப்படையில்.
   1) மகிழ்விக்கும் இடம்   2) பார்க்கும் இடம்   3) உரையாடும் இடம்
   4) கூடும் இடம்   5) விளையாடும் இடம் ( )

12. 'ஆற்றுகை' என்பதன் அடிப்படை அர்த்தம்.
   1) ஒருவர் / பலர் முன்பாக செய்து காட்டுவது.
   2) கலையாகப் படைத்தல்.
   3) பலரை ஒன்று சேர்ப்பது.
   4) 'அழகை' வெளிப்படுத்துவது.
   5) 'கதை' ஒன்றை வெளிப்படுத்துவது. ( )

13. "புனித தன்மையின் பால் மக்கள் மேற்கொள்ளும் நடத்தைக் கோலங்களின் தொகுப்பு சடங்காகும்" எனக் கூறியவர்.
   1) பக்தவக்சல பாரதி   2) ஜோர்ஜ் தொம்சன்   3) றிச்சாட் சதேன்
   4) பேரா.கா.சிவதம்பி   5) பேரா.எதிரிவீர சரத்சந்திரா ( )

14. நாடகத் தயாரிப்பாளர் என்பவர்.
   1) நடிகர்களுக்குப் பயிற்சியளிப்பவர்.
   2) எழுத்துருவை மேடையில் காட்சியாக்குபவர்.
   3) நிதி முகாமைத்துவத்தை மேற்கொள்பவர்.
   4) மேடை முகாமைத்துவத்தை கையாள்பவர்.
   5) காட்சிப் பொருட்களைத் தயாரிப்பவர். ( )

15. நாடகம் முழுமை பெறுவது.
   1) நெறியாளரின் முன்னிலையில்   2) தயாரிப்பாளன் முன்னிலையில்
   3) ஒப்பனையாளன் முன்னிலையில்   4) பார்வையாளன் முன்னிலையில்
   5) நடிகரின் முன்னிலையில் ( )

16. கிரேக்க 'திறஜெடி' தோன்றியது.
   1) கோமுஸ் ஊர்வலத்தில் இருந்து   2) டித்றாம் பாடலில் இருந்து
   3) லிங்கப் பாடல்களில் இருந்து   4) குரவை பாடலில் இருந்து
   5) கிரேக்க புராணங்களிலிருந்து ( )

17. கிரேக்க அரங்கில் நாடகத்துடன் தொடர்புடைய தெய்வம்.
   1) தியோசஸ்   2) அப்பலோ   3) கொறிகஸ்
   4) டயோனிசஸ்   5) புரூட்டஸ் ( )

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk


Agaram.LK - Keep your dreams alive!

18. 'கிப்போகிரைட்' என கிரேக்கத்தில் அழைக்கப்பட்டவர்.
   1) நடிகர்  2) பாடகர்
   3) துணைநடிகர்  4) இரட்டை புல்லாங்குழல் ஊதுபவர்
   5) கோரசின் தலைவர் ( )

19. உலக நாடக வரலாற்றில் முதலாவது நடிகனாக விளங்குபவர்.
   1) தெஸ்பிஸ்  2) யூரிப்பிடிஸ்  3) சோபோகிளிஸ்
   4) அரிஸ்ரோட்டில்  5) தெரன்ஸ் ( )

20. 'தெஸ்பிசின் வண்டி' என்ற கலைச்சொல் குறிப்பது.
   1) தெஸ்பியன் வரலாற்றை  2) கிரேக்க திறஜடியை  3) கிரேக்க சற்றயரை
   4) விதி சாபத்தை  5) அரங்க வரலாற்றை ( )

21. இப்படத்தில் காணப்படும் பொறி எதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது.



   1) தெய்வம் தரு கருவி
   2) இறந்தவரின் உடலை வைப்பதற்கு
   3) உயரமாக நின்று உரையாட
   4) செய்தியாளரின் வருகைக்கு
   5) கோறலின் வருகைக்கு ( )

22. சோபோகிளிசின் காலத்தில் ஈடிப்பஸ் நாடகத்தில் நடித்த நடிகர்கள்.
   1) 7 பேர்  2) 3 பேர்  3) 15 பேர்  4) 2 பேர்  5) 6 பேர் ( )

23. கிரேக்க அவல நாடக ஆசிரியர்களுள் மூத்தவராகவும், மூன்றாமவராகவும் கருதப்படுபவர்கள் முறையே.
   1) சோபோக்கிளிஸ், ஈஸ்கலஸ்  2) சோபோக்கிளிஸ், யூரிப்பிடிஸ்
   3) ஈஸ்கலஸ், யூரிப்பிடிஸ்  4) யூரிப்பிடிஸ், சோபோக்கிளிஸ்
   5) யூரிப்பிடிஸ், ஈஸ்கலஸ் ( )

24. அரிஸ்ரோபென்ஸ் பற்றிய சரியான கூற்று.
   1) முக்கூட்டுத் தொகுதி நாடகங்களை எழுதியுள்ளார்.
   2) 18 முறை நாடகப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்.
   3) புதிய மகிழ் நெறியின் தந்தை எனப்படுவார்.
   4) பழைய கொடி நாடக ஆசிரியர்.
   5) 92 நாடகங்களை எழுதியுள்ளார். ( )

25. மீடியா, எலெக்ரா, ஹெலென் ஆகிய நாடகங்களை எழுதிய நாடக ஆசிரியர்.
   1) ஈஸ்கலஸ்  2) சோபோகிளிஸ்  3) அரிஸ்ரோபன்ஸ்
   4) மெனாண்டர்  5) யூரிப்பிடிஸ் (

26. நடிகரின் இயற்கையான சாரீர வளத்திலும் இசை ஞானத்திலும் பெரிதும் தங்கியுள்ள கலை வடிவம்.
   1) பார்சி வழி அரங்கு  2) பலே  3) ஊம நாடகம்
   4) நவீன நாடகம்  5) கூத்து ( )

Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

27. நாடக ஆற்றுகையின் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதில் பெரிதும் பங்கெடுப்போர்.
   1) நெறியாளர்   2) பார்ப்போர்   3) தயாரிப்பாளர்
   4) நாடகாசிரியர்   5 விமர்சகர்   (   )

28. சுற்றிவரப் பார்ப்போரைக் கொண்ட பாரம்பரிய அரங்க வெளி.
   1) கிரேக்கப் பேரரங்கு   2) கரளிய அரங்கு   3) தெருக்கூத்து அரங்கு
   4) வட்டக்களரி அரங்கு   5) படச்சட்ட அரங்கு   (   )

29. ஊமம் சார்ந்த அரங்க விளையாட்டாகக் கொள்ளத்தக்கது.
   1) கோழி கோட்டான் ஆகும்   2) ஆடும் வீடும் ஆகும்   3) குருட்டு ஆட்டோ ஆகும்
   4) பஸ் ஆகும்   5) 7up   (   )

30. நாடகத்தின் மூலக்கூறுகளுள் பிரதானமான ஒன்றாக அமைவது.
   1) எழுத்துரு ஆகும்   2) நடிப்பு ஆகும்   3) வேட உடை ஆகும்
   4) காட்சி விதானிப்பு ஆகும்   5) இசை ஆகும்   (   )

31. ஒபேறா என்பது.
   1) வாய் மொழியைப் பயன்படுத்தாது நடிகர் ஒருவர் நடிபாகத்தைச் சித்திரிப்பதாகும்.
   2) குறிக்கப்பட்ட செயலை ஆடல் வழியாகச் சித்திரித்துக் காட்டுவதாகும்.
   3) முன்னாயத்தமின்றி தரப்பட்ட செயலைப் பேசி நடித்துக் காட்டுவதாகும்.
   4) தாளம், சந்தம் என்பவற்றிற்கேற்றவாறு பாடி நடித்துக் காட்டுவதாகும்.
   5) முகபாவங்களால் வெளிப்படுத்தப்படுவது ஆகும்.   (   )

32. பின்வருவனவற்றுள் நாடகத்தயாரிப்பாளரின் பணி அல்லாதது.
   1) நாடகத்தின் கலைத்துவம் சாரா விடயங்களுக்குத் தலைமை தாங்குதல்.
   2) நடிகர்களை ஒழுங்குபடுத்திக் கொள்ளுதல்.
   3) அனுமதிச் சீட்டுக்களை விற்றல்.
   4) நாடகத்தை நெறியாள்கை செய்தல்.
   5) நடிபாகமளித்தல்.   (   )

33. அரங்கப் பொருட்கள் எனப்படுவது யாது?
   1) அரங்க அலங்காரப் பொருட்களாகும்.
   2) நடிகர்களின் ஆடை அணிகளாகும்.
   3) நடிகர்கள் மேடையில் பயன்படுத்தும் பொருட்களாகும்.
   4) ஒளிப் பொருட்களாகும்.
   5) இசைக்கருவிகளாகும்.   (   )

34. நாடகத்தின் சிறப்பியல்புகளிலொன்று.
   1) சொல்லாடல்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டது.
   2) நடிகரைப் பிரதான ஊடகமாகக் கொண்டது.
   3) கேட்டல் வழியாக மட்டும் பெறப்படுவது.
   4) பெரும்பாலும் கட்புலக் கலைவடிவமாகக் காணப்படுவது.
   5) அசைவுகளை மட்டும் கொண்டது.   (   )

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!


agaram.lk

www.agaram.lk

35. பின்வருவனவற்றுள் சிறந்த நடிகர் ஒருவருக்கு வேண்டப்படுவன.
1) ஆர்வம், உள்ளார்ந்த ஆற்றல், மன உறுதி, பயிற்சி என்பன.
2) ஆர்வம், விருப்பம், பயிற்சி, தடித்த குரல் என்பன.
3) மன உறுதி, ஆர்வம், அழகிய உடல், பயிற்சி என்பன.
4) பயிற்சி, மனவலிமை, அழகிய உடல், மெல்லிய குரல் என்பன.
5) அழகிய உடல், ஆர்வம், தடித்த குரல் என்பன. ( )

36. கருத்தூன்றல், அவதான பயிற்சிகளிற்கு அழுத்தம் கொடுக்கும் அரங்க விளையாட்டு.
1) ஆடும் வீடும் 2) கோழி கோட்டான் 3) பழக்கலவை
4) கரடியும் கிராம மக்களும் 5) நண்டு, இறால், மீன் ( )

37. நாடக எழுத்துருவினை வியாக்கியானம் செய்யும் கலைஞன்.
1) நடிகன் 2) காட்சி விதானிப்பாளன் 3) நெறியாளன்
4) தயாரிப்பாளன் 5) நாடக ஆசிரியர் ( )

38. ஆற்றுகை கலையாக ஏற்க முடியாதது.
1) பலே 2) ஒபேறா 3) கூத்து 4) ஓவியம் 5) இசை ( )

39. துன்பம் நிறைந்த காட்சிகளை எடுத்துக் கூறும் நாடகம்.
1) மகிழ்நெறி நாடகம் 2) அவலச்சுவை நாடகம் 3) சற்றையர் நாடகம்
4) வீர நாடகம் 5) விகட நாடகம் ( )

40. ஆசிரியர் விரும்புவதை பார்வையாளரிற்கு முழுமையாக வழங்கும் நபர்.
1) தயாரிப்பாளன் 2) நெறியாளன் 3) நடிகன்
4) ஒளியமைப்பாளர் 5) மேடை முகாமையாளர் ( )

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk

www.agaram.lk

## பகுதி II

❖ **பகுதி A இல் இருந்து இரண்டு வினாக்களையும், பகுதி B இல் இருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை தருக?**

## பகுதி A

01. 1) நாடகம் என்றால் என்ன? (3 புள்ளிகள்)
    2) ஆற்றுகைக் கலையின் பண்புகளை விளக்குக. (5 புள்ளிகள்)
    3) ஏனைய ஆற்றுகைக் கலைகளிலிருந்து நாடகம் எவ்வாறு வேறுபடுகின்றது என்பதை விளக்குக. (7 புள்ளிகள்)

02. 1) அவலச்சுவை நாடக ஆசிரியர்கள் தத்தமது காலப்பின்னணிகளுக்கு ஏற்ப நாடகங்களை எழுதியுள்ளனர். பின்வருவோர் அவலச்சுவை நாடக மரபிற்கு ஆற்றிய பங்களிப்புகளை விளக்குக.
    i) ஈஸ்கலஸ் (5 புள்ளிகள்)
    ii) சோபோகிளிஸ் (5 புள்ளிகள்)
    iii) யூரிப்பிடிஸ் (5 புள்ளிகள்)

03. சடங்கு பற்றிக் கூறி கிரேக்க 'ரஜடி'யின் தோற்றத்தில் சடங்கின் செல்வாக்கை மதிப்பீடு செய்க. (15 புள்ளிகள்)

## பகுதி B

04. "ஈடிப்பஸ் ஓர் உலகப் பிரசித்தமான 'ரஜடி' நாடகம் ஆகும்.
    i) ஈடிப்பஸ் மன்னன் நாடகத்தில் அரங்கிற்கு புறத்தே நடைபெறும் செயல்களாக கொள்ளத்தக்க 3 செயல்களைத் தருக. (6 புள்ளிகள்)
    ii) இந் நாடகத்தில் எவ்வாறு அவலம் வளர்த்தெடுக்கப்படுகிறது? விளக்குக. (9 புள்ளிகள்)

05. 'சிலப்பதிகாரம் எழுதப்பட்ட காலத்தில் நெறிமுறைப்படுத்தப்பட்ட அரங்க மரபு ஒன்று தமிழ் நாட்டில் இருந்துள்ளது' இக்கூற்றினை உதாரணங்களுடன் விளக்குக. (15 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றில் விரும்பிய மூன்று விடயங்களுக்கு சிறுகுறிப்பு எழுதுக.
    i) கிரேக்க அரங்க வெளி
    ii) பலே
    iii) ஒப்பேரா
    iv) கூத்து
    v) இசை நாடகம்

(3x5=15 புள்ளிகள்)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!